1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே,

1989 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்டத்தின் மூலம், அனைத்து பல்கலைக் கழகங்களின் அமைப்புகளிலும், உறுப்பினர் ஒருவர் இரு முறைக்கு மேல் உறுப்பினர்களாக இருக்கலாகாது என்ற பிரிவு அண்மையில் நீக்கப்பட்டுவிட்டது.

பவானிசாகரில் சுற்றுலா மையம்.

*878—திரு. வி. கே. சின்னசாமி:
மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகரில் சுற்றுலா மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) ஆகவே, இக்கேள்வி எழுவில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகரிலே ஒரு சுற்றுலா மையம் அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே இதற்கு முன்னாலே இருந்த அமைச்சர்கள் எல்லாம் அறிவித்திருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட, ஒரு வாரத்திற்கு முன்பு அறிவித்தார் கள். எல்லோரும் அங்கே இன்முகத்தோடு இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவிலேயே அந்தத் திட்டத்தை உருவாக்க முன் வர வேண்டும்; அமைச்சர் அவர்களே, அங்கு வந்து நேரடியாக பார்ப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் எப்போது வருவார்கள் என்ற ஏக்கத்திலே நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். அதோடு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் கேட்கும் கேள்வி, அமைச்சர் அவர்கள் எப்போது வருவார்கள்—அது தானே?

திரு. வி. கே. சின்னசாமி: தாங்கள்கூட மணி விழா எடுத்த வுடன் வருவதாக அறிவித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால், அந்தச் சுற்றுலா மையம் அமைய 5, 10 ஆண்டுக் காலமாகும். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏப்ரல் 24 ஆம் தேதியன்று இந்த அவையிலே பதில் சொல்லும்போது, மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ராமசாமி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு, பெரியார் மாவட்டத்தில் இருக்கக் கூடிய கொடுமுடிக்கு யாத்திரிகர்கள் அதிகமாக வருகிறார்களே அதையும் சுற்றுலா மையமாக அறிவிக்க முடியுமா என்று கேட்ட கேள்விக்கு ஏற்கெனவே பெரியார் மாவட்டத்தில் கூடுதுறையை பவானி கூடுதுறையை, சுற்றுலா மையமாக அறிவித்திருக்கிறோம்; ஆகவே, இரண்டாவது இடமாக பவானிசாகரைத் தேர்ந்தெடுப்பதா அல்லது, கொடுமுடியைத் தேர்ந்தெடுப்பதா என்பதை நான் நேரிலேயே பார்த்து முடிவு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உதகையிலிருந்து நான் திரும்புகின்றபோது, 19 ஆம் தேதி மாலை 5 மணிக்கு பவானிசாகருக்கு வருகிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் அங்கே என்னைச் சந்தித்து, அந்த இடத்தைப் பார்வையிட்டு, பவானிசாகரையும் மாவட்ட உலாத் தலமாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதிக் கேள்விகளை உறுப்பினர் அங்கே பவானிசாகரிலே கேட்டுக் கொள்ளலாம். (சிரிப்பு).

திரு. வி. கே. சின்னசாமி: ஆகவே, நாங்கள் எல்லாம் நம்பிக்கையோடு இருக்கிறோம். சுற்றுலா மையம் பவானிசாகரிலேதான் அமைக்க வேண்டும். 'அன்னக்கிளி' போன்ற படங்களையெல்லாம் அதற்குப் பக்கத்திலே தான் எடுத்தார்கள். அட்டகாசமாக அந்தப் படம் ஓடியது. எல்லோரும் பார்த்தார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு சினிமா படம் எடுக்கும் அத்தனை பேரும், பவானிசாகர், கோபி போன்ற பகுதிகளிலே தான் படம் எடுக்கிறார்கள். படம் அருமையாக ஓடுகிறது. ஆகவே இதைச் சுற்றுலா மையமாக அமைத்தால், எடுக்கின்ற படங்களையெல்லாம் அங்கேதான் எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக மீண்டும் அங்கு வந்து அந்த இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்; அவர்களிடத்திலும் விண்ணப்பித்துக் கொள்கிறேன்; பவானிசாகரைத்தான், பவானிக்கு அடுத்து ஒரு சுற்றுலா மையமாக உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பவானிசாகரிலே இருக்கின்ற வசதிகள், இயற்கைக் காட்சிகள் இவற்றையெல்லாம் பார்ப்

1990 மே 11]

தற்கு, 500 பேர், நாள் ஒன்றுக்குவருவதாகத் தகவல் இருக்கிறது. ஆகவே நம்முடைய திரு. சின்னசாமி அவர்களுடைய ஆர்வத்தை மதித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தெப்பக்குளம் தூர் எடுத்து சுற்றுச் சுவர் கட்டுதல்.

*3113—திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராசபாளையம் தொகுதி தேவதானம் நச்சாடை தவிர்த்தருளிய பெருமாள் கோவிலில் உள்ள தெப்பக்குளம் தூர் எடுத்து சுற்றுச் சுவர் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய பெருமாள் கோயிலில் திருப்பணிக்குழு ஒன்றினை அமைத்து முதற் பணியாக தெப்பக் குளத்தினைத்தூர் எடுத்து சுத்தம் செய்யும் பணியும், சுற்றுச் சுவர் கட்டிடும் பணியும் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

9-20 மணி

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையம் தொகுதியிலுள்ள தேவஸ்தானம் கிராமத்திலுள்ள நச்சாடை தவிர்த்தருளிய பெருமாள் கோவில் புராதன சிறப்புடைய பிரசித்திப் பெற்ற கோவில். அந்த கோவிலிலுள்ள தெப்பக்குளம் சுற்றுச் சுவர் இடிந்து தூர் வாராமல் இருந்ததை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அமைச்சர் அவர்களும் அந்த ஏற்பாட்டைச் செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அது எப்பொழுது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதற்காக ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்படவிருக்கிறது. மிக விரைவிலே இந்தக் குழுவினை அமைத்து இந்தப் பணியினையும் அறநிலையத் துறை எடுத்துக்கொள்ளும்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணிக் குழுவில் இப்பொழுது நியமிக்க இருக்கின்ற பரம்பரை அறங்காவலர் குழுவினரைத் தவிர மற்ற வர்கள் அதிலே இடம் பெற வாய்ப்பு இருக்கிறதா?